OP : 20/2023

நாள் : 13.08.2024

ம.சா. : 1

பெயர் : உமாசாந்தி

1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் குறுக்கு விசாரணை

என் அம்மா என்பெயரில் சொத்து குறித்து உயில் எழுதி வைத்திருக்கிறார் அந்த சொத்து எனக்கு வேண்டுமென்று probate செய்வதற்காக வழக்கு போட்டுள்ளனே. பிரதிவாதிகள் மூன்று பேரும் எனது அக்கா அலமேலு மங்கையின் குழந்தைகள் என்றால் சரி. இந்த மனு சொத்து 1996 ல் ஆவண எண். 738 என்ற எண்ணில் மயிலாடுதுறை இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் என் தாயார் பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் சரி. 06.01.2006 ல் என் அம்மா என் பெயரிலும் 3 பிரதிவாதிகள் பெயரிலும் அந்த சொத்து குறித்து ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. என் அம்மா 2007 ல் இறந்த பிறகு வருவாய் துறை ஆவணங்களில் என்பெயரிலும் மூன்று எதிர்மனுதாரர்கள் பெயரிலும் கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர்கள் மூன்று பேரும் அந்த சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டை பரிகாரம் கோரி மயிலாடுதுறை உதவி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்து அது OS. No. 540/2020 என்று நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதிலிருந்து எனக்கு சம்மன் வரவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் அந்த வழக்கில் நான் பிரதிவாதி என்றாலும் அந்த வழக்கிலிருந்து எனக்கு சம்மன் சார்வாகி நான் வழக்கறிஞர் வைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த வழக்கு சம்பந்தமாகவும் அந்த உயில் சம்பந்தமாகவும் இந்த மனுவில் தெரிவிக்கவில்லை என்றால் சரி. அப்போது எனக்கு அது பற்றி தெரியாது அதனால் சொல்லவில்லை. அந்த வழக்கு நிலுவையில் உள்ளது எனக்கு தெரியும் என்றாலும் அந்த வழக்கு பற்றியும் அந்த உயில் பற்றியும் இந்த மனுவில் சொன்னால் எனக்கு பாதகம் ஆகிவிடும் என்பதால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதி வைத்தவர் இறந்து 7 நாட்களுக்குள் probate செய்ய

மனு கொடுக்கவேண்டுமென்றாலும் அப்படி மனு கொடுக்காவிட்டால் அந்த உயில் செல்லாது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2006 வது வருடம் என் அம்மா தன்னுடைய சொத்தில் எனக்கு பாதியும் என் அக்கா குழந்தைகளுக்கு பாதியும் சரிசமமாக எழுதி வைத்தார் என்றாலும் அதை தெரிந்து கொண்டே முழு சொத்தையும் அடைவதற்காக பொய்யான உயில் தயார் செய்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 8 ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்ட உயில் ஆவணம் என்றால் சரியல்ல.